**செய்தி வெளியீடு எண்: 237** **நாள்: 07.04.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5.4.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், தையூர் “பி” கிராமத்தில் 1000 கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கும் வகையில் 16 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓய்வுக்கூடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள குலவணிகர்புரத்தில் 3 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சட்டமுறை எடையளவு ஆய்வகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகத்தை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் 12.8.2014 அன்று வெளியிட்ட அறிவிப்பில், கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பவரால் பணி இடத்திற்கு அருகில் தற்காலிக இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் தங்கும் இட வசதிகள் பாதுகாப்பு அற்றதாக உள்ளன. மேலும் சிறிய கட்டுமான நிறுவனங்கள் அதற்கான வசதிகளை செய்து கொடுப்பதே இல்லை. இந்த சிரமங்களைப் போக்கிடும் வகையில், 9 இடங்களில் 7000 தொழிலாளர்கள் தங்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், தையூர் “பி” கிராமத்தில் 1000 கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கும் வகையில் 16 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓய்வுக்கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இந்த ஓய்வுக்கூடமானது, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, சலவை செய்யும் வசதி, குழந்தைகள்

மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கி தொடர்பு சேவை, படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள குலவணிகர்புரத்தில் 3 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சட்டமுறை எடையளவு ஆய்வகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இதன்மூலம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எண்ணற்ற தொழிலாளர்கள், வேலையளிப்போர் மற்றும் வணிகர்கள் பயனடைவர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., தொழிலாளர் நலத்துறை ஆணையர் / இணைச் செயலாளர் திரு.ஆர். நந்தகோபால், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**